## (இ) விலைவாசிகளும், கூலிகளும், தொழிலும்

விலைவாசிகள்

கொழும்புத் தொழிலாளர் வர்க்கக் குடும்பங்களின் வரவு செலவு சம்பந்தமாக, குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட நுகர்வோர் விலைக் குறிகாட்டி, வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. இக்குறிகாட்டியில் உட்படும் பொருட்களின் அளவுப் பிரமாணங்கள் 1953ம் ஆண்டின் VI-வது பருவப் பத்திரத்தின் சிபார்சுகளை ஆதாரமாகக்கொண்டவையாகும். பின்வரும் அட்டவணை கடந்த மூன்று வருட காலத்தில் இந்நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பொருட்களின்படியும், துறைகளின்படியும் பிரித்துக் காட்டுகிறது.

**அட்டவணை II—23**

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி

(1952=100)

| வருடம் | சகல விடயங்களும் | பொருட்களின்படி | | | | | துறைகளின்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு (61·9%) | உடை (9·4%) | எரிபொருள், விளக்கு (4·3%) | வாடகை (5·7%) | ஏனைய (18·7%) | உள்நாட்டுத் தொகுதி (51%) | இறக்குமதித் தொகுதி (44%) | ஏற்றுமதித் தொகுதி (5%) |
| 1959 | 105·2 | 104·7 | 92·1 | 102·4 | 101·5 | 115·3 | 108·0 | 97·1 | 153·1 |
| 1960 | 103·5 | 100·8 | 95·1 | 102·7 | 101·5 | 117·5 | 108·9 | 93·7 | 138·4 |
| 1961 | 104·8 | 99·8 | 103·9 | 104·4 | 101·5 | 122·8 | 112·3 | 94·6 | 119·1 |

மூலங்கள் : குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மகாவங்கி.

ஒவ்வொரு மாதத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:—

**அட்டவணை II—24**

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட மாற்றங்கள்

(1952=100)

| மாதம் | சகல விடயங்களும் | | | இறக்குமதித் தொகுதி | | | உள்நாட்டுத் தொகுதி | | | ஏற்றுமதித் தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | மாற்றம் % | 1960 | 1961 | மாற்றம் % | 1960 | 1961 | மாற்றம் % | 1960 | 1961 | மாற்றம் % |
| தை .. | 105·4 | 104·1 | —1·2 | 98·2 | 92·9 | —5·4 | 107·2 | 112·0 | +4·5 | 156·0 | 122·8 | —21·3 |
| மாசி .. | 105·3 | 103·9 | —1.3 | 98·6 | 94·0 | —4·7 | 106·5 | 110·5 | +3·8 | 159·0 | 126·0 | —20·8 |
| பங்குனி .. | 105·6 | 103·3 | —2·2 | 98·5 | 92·0 | —6·6 | 107·3 | 111·3 | +3·7 | 155·8 | 123·2 | —20·9 |
| சித்திரை .. | 104·0 | 103·9 | —0·1 | 93·6 | 93·6 | — | 108·7 | 111·0 | +2·1 | 151·1 | 123·4 | —18·3 |
| வைகாசி .. | 102·4 | 104·0 | +1.6 | 90·4 | 93·9 | +3·9 | 108·8 | 111·1 | +2·1 | 148·7 | 123·3 | —17·1 |
| ஆனி .. | 102·5 | 104·5 | +2·0 | 90·9 | 94·6 | +4·1 | 109·0 | 111·7 | +2·5 | 142·1 | 121·2 | —14·7 |
| ஆடி .. | 101·2 | 104·5 | +3·3 | 91·6 | 95·6 | +4·4 | 107·1 | 111·2 | +3·8 | 128·1 | 114·8 | —10·4 |
| ஆவணி .. | 100·7 | 105·4 | +4·7 | 91·8 | 96·5 | +5·1 | 106·6 | 112·3 | +5·3 | 121·7 | 113·2 | — 7·0 |
| புரட்டாதி .. | 102·6 | 105·4 | +2·7 | 92·5 | 95·8 | +3·6 | 109·4 | 112·9 | +3·2 | 122·8 | 114·7 | — 6·6 |
| ஐப்பசி .. | 103·2 | 105·9 | +2·6 | 91·9 | 95·6 | +4·0 | 111·2 | 113·8 | +2·3 | 123·1 | 116·8 | — 5·1 |
| கார்த்திகை.. | 104·9 | 105·9 | +1·0 | 93·2 | 95·3 | +2·3 | 113·1 | 114·2 | +1·0 | 126·8 | 115·8 | — 8·7 |
| மார்கழி .. | 104·1 | 106·2 | +2·0 | 93·0 | 95·0 | +2·2 | 111·8 | 115·1 | +3·0 | 125·0 | 113·6 | — 9·1 |
| சராசரி .. | 103·5 | 104·8 | +1·3 | 93·7 | 94·6 | +1·0 | 108·9 | 112·3 | +3·1 | 138·4 | 119·1 | —13·9 |

மூலங்கள்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மகா வங்கி

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியால் அளவிட்டு நோக்கின் சில்லறை விலைமட்டம், 1960ம் ஆண்டிலும் பார்க்கச் சராசரி 1.3 சதவீதத்தால் கூடியதுஆகும். இவ்வுயர்ச்சி உள்நாட்டுத் தொகுதிப் பொருட்களின் 3.1 சதவீத உயர்ச்சியும், இறக்குமதித் தொகுதிப் பொருட்களின் 1.0 சதவீத உயர்ச்சியும் ஒன்று சேர்ந்து, ஏற்றுமதித் தொகுதிப் பொருட்களின் 14.0 சதவீத வீழ்ச்சியை மேலதிகமாக ஈடு செய்தமையால் ஏற்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியில் ஏற்று மதித் தொகுதிப் பொருட்களின் முக்கியத்துவம் ஆக 5 சதவீதமாகும்.

அட்டவணை II-23ல் உள்ள பொருட்தொகுதிக் குறிகாட்டிகளைக் கூர்மையாக நோக்கும்பொழுது, உணவுப் பொருட்களின் சராசரி விலை 1960ம் ஆண்டு இருந்ததிலும் பார்க்க 1961ம் ஆண்டில் 1.0 சதவீதம் மலிவாயிருந்தன எனவும், ஆனுல் உடைகள், எரிபொருள் விளக்கு, ஏனைய பொருட்கள் முதலியன முறையே 9.3 சதவீதத்தாலும், 1.7 சதவீதத்தாலும், 4.5 சதவீதத்தாலும் உயர்ந்தன எனவும் புலனுகிறது. உடைகளுக்கான தொகுதியின் விலைஅதிகரிப்புக்கு, ஆடைகளின்மேல் விதிக்கப்பட்ட உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளும், ஒரு யாரின் விலை ரூபா 2க்கு மேலானதாக உள்ள (கொள்விலை காப்புறுதி, கப்பற்கூலி என்ற ரீதியில்) ஆடைகளின்மேல் 1961ம் ஆண்டு தை மாதம் 25ம் திகதி கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளுமே, காரணங்களாகும். எரிபொருள் விளக்குத் தொகுதியில் ஏற்பட்ட விலையேற்றத்திற்கு முக்கியமான காரணங்களாவன, மண்ணெண்ணெயின்மீது ஒரு கலனுக்கு 3 சதப்படி உயர்த்தப்பட்ட இறக்குமதித் தீர்வையும், தீப்பெட்டிகளின் பேரில் ஒரு பெட்டிக்கு 1½ சதப்படி உயர்த்தப்பட்ட உள்நாட்டு வரியுமேயாகும். ஏனையவை என்ற தொகுதியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு முக்கியமாக, புகையிலையின் இறக்குமதித் தீர்வை ஒரு இருத்தலுக்கு ரூபா 8.50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டமையும், உள்நாட்டுப் புகையிலையின்மீது இருந்த உள்நாட்டு வரி ஒரு இருத்தலுக்கு ரூபா 8.50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு ரூபா 28.50 என விதிக்கப்பட்டமையுமே, காரணங்களாகும்.

உணவுப் பொருட்களைத் துறைகளின்படி பிரித்தமைத்து ஆராயும்பொழுது, அவற்றின் உப-பகுதிகளின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் புலனுகின்றது. இம் மாற்றங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை II—25**

**கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் உணவுத் தொகுதியின் உபபகுதிகளின் விலைக்குறிகாட்டிகள்**

(1952=100)

| வருடம் | சகல உணவு | உள்நாட்டு உணவு | ஏற்றுமதி உணவு | இறக்குமதி உணவு |
|---|---|---|---|---|
| 1959 | 104·7 | 104·4 | 153·1 | 97·0 |
| 1960 | 100·8 | 104·7 | 138·4 | 91·2 |
| 1961 | 99·8 | 110·6 | 119·1 | 87·2 |

மூலங்கள்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
இலங்கை மகா வங்கி

1961ம் ஆண்டு உள்நாட்டு உணவுப் பொருட்களின் விலைக்குறிகாட்டி முந்தைய ஆண்டில் இருந்ததிலும் பார்க்க 5.6 சதவீதத்தால் உயர்ந்தது. இவ்வுயர்ச்சி, ஏனைய காரணங்களுடன், மோட்டார் எரியெண்ணெயின்மேல் அதிகரித்த தீர்வை விதிக்கப்பட்டமையில் உணவுப் பொருட்களின் சுமைகூலியும் அதிகரித்தமையைப் பிரதிபலிக்கின்றது. ஏற்றுமதி உணவுகளின் உப-பகுதி 14.0 சதவீதம் வீழ்ச்சியடைந்தமைக்குத் தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிக் கேள்வி குறைந்தமையால் உள்நாட்டு விலைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

இறக்குமதியான உணவுகளின் தொகுதி 4.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த தன் காரணம், ஒரு கொத்து 36 சதமாக இருந்த பங்கீட்டரிசியின் விலை 1960ம் ஆண்டு சித்திரை மாதம் குறைக்கப்பட்டதன் முழுப் பலனும், 1961ம் ஆண்டு முழுவதும் நிலவியமையேயாகும். இவ்விலைக்குறைப்பும், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் முதலிய விடயங்களில் அரசாங்கத்தின் பூரண உரிமைக்கு உட்படாத ஏனைய உணவுப் பொருட்களின் விலைவாசிகள் 2.7 சதவீதத்தால் குறைந்தமையும், ஒன்று சேர்ந்து 1961ம் ஆண்டு ஆடி மாதம் 27ந் திகதி வெள்ளைச் சீனி, கோதுமைமா முதலியவற்றின் விலை அதிகரிக்கப்பட்டமையால் ஏற்பட்ட பலனை, மேலதிகமாக ஈடுசெய்தன. வெள்ளைச்சீனியின் விலை 62 சதத்திலிருந்து 67 சதத்திற்கும், கோதுமை மாவின் விலை 23 சதத்திலிருந்து 28 சதத்திற்கும் மேற்படி திகதியில் உயர்த்தப்பட்டன. எனினும் 1961ம் ஆண்டு மார்கழி மாதம் 4ம் திகதி வெள்ளைச் சீனியின் விலை முன்பு இருந்த மட்டத்திற்குக் குறைக்கப்பட்டது.

### கூலிகள்

அரசாங்க ஊழியர்களினதும், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களினதும் கூலி விகிதங்களின் நடமாட்டங்கள் பற்றிய ஒரு குறிகாட்டித் தொடரை மகாவங்கி கணித்துள்ளது.* இக்குறிகாட்டி 1959ம் ஆண்டு புரட்டாதி 30ந் திகதியில் இருந்த சகல அரசாங்க ஊழியர்களில் 95 சதவீதத்தினரைத் தழுவியது. அதே காலத்தில் சகல ஊழியர்களின் தொகையிற் பயிற்சியற்ற அரசாங்கத் தொழிலாளர்களின் தொகை 19.1 சதவீதமாகும். 1953ம் ஆண்டுமுதல் இத்தொழிலாளர்களின் கூலி விகிதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வரும் அட்டவணையிற் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II—26**

**அரசாங்க ஊழியர்களுக்கான கூலிவிகிதக் குறிகாட்டி எண்கள்**

(1952=100)

| காலம் | இலிகிதரும் தொழிற் பயிற்சி பெற்றோரும் | | சிறு சேவை ஊழியர் | | மத்திய அரசாங்க ஊழியர் (அ) | | அரசாங்க பாடசாலை ஆசிரியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி | உண்மைக் கூலி | கூலி | உண்மைக் கூலி | கூலி | உண்மைக் கூலி | கூலி | உண்மைக் கூலி |
| 1953 .. | 101·0 | 99·5 | 102·1 | 100·5 | 101·6 | 100·0 | 101·0 | 99·4 |
| 1954 .. | 101·4 | 100·3 | 102·4 | 101·3 | 101·9 | 100·8 | 101·2 | 100·1 |
| 1955 .. | 106·9 | 106·4 | 110·4 | 109·9 | 108·7 | 108·2 | 110·2 | 109·7 |
| 1956 .. | 108·7 | 108·5 | 113·0 | 112·8 | 111·0 | 110·8 | 113·2 | 113·0 |
| 1957 .. | 111·2 | 108·2 | 116·0 | 112·8 | 113·8 | 110·7 | 113·9 | 110·8 |
| 1958 .. | 122·3 | 116·5 | 130·4 | 124·2 | 126·7 | 120·7 | 117·4 | 111·8 |
| 1959 .. | 122·3 | 116·3 | 130·4 | 124·0 | 126·7 | 120·4 | 117·4 | 111·6 |
| 1960 .. | 122·3 | 118·2 | 130·4 | 126·0 | 126·7 | 122·4 | 117·4 | 113·4 |
| 1961 .. | 122·3 | 116·7 | 130·4 | 124·4 | 126·7 | 120·9 | 117·4 | 112·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி

(அ) இலிகிதர், தொழிற்பயிற்சி பெற்றோர், சிறுசேவை ஊழியர் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

இலிகிதர், தொழிற் பயிற்சி பெற்றோர் ஆகிய ஊழியர்களினதும், சிறு சேவை ஊழியர்களினதும் கூலி விகிதங்கள் 1952ம் ஆண்டின் பின்னர், முறையே 22.3 சதவீதத்தாலும், 30.4 சதவீதத்தாலும் அதிகரித்தன. எனவே மத்திய அரசாங்க ஊழியர்களுக்கான மொத்தக் குறிகாட்டி 126.7 புள்ளிகளாக (1952=100) உயர்ந்

* இக்குறிகாட்டி எண்கள் கணிக்கப்பட்ட முறைபற்றிய ஒரு குறிப்புரை இலங்கை மகாவங்கியின் மாசி மாதச் சஞ்சிகையில் உள்ளது. அதிகார பதவியில் உள்ள பரிபாலன உத்தியோகத்தர், உயர்தொழில் ஊழியர், தொழிற் பயிற்சி பெற்றோர் ஆகிய ஊழியர்களை இக்குறிகாட்டியிற் சேர்க்கவில்லை. ஆண்டு அறிக்கையின் IIம் பின்னிணைப்பில் உள்ள 37ம் அட்டவணையையும் காண்க.

த்து. இதே காலத்தில் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களினது கூலிவிகிதக் குறிகாட்டி 17.4 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்புக்கள் இரு தடவைகளில் ஏற்பட்டன. முதலாவதாக, 1955ம் ஆண்டு சித்திரை மாதம் முதல் சகல அரசாங்க ஊழியர்களினதும் சம்பள விகிதங்கள் உயர்த்தப்பட்டதோடு, வாடகைத் துணைச் சம்பளமும் உயர்த்தப்பட்டது. விவாகமாகாத ஊழியர்களினது அடிப்படைச் சம்பளத்தில் 7.5 சதவீதமாக இருந்த வாடகைத் துணைச்சம்பளம், 8.5 சதவீதத்திற்கும், விவாகமான ஊழியர்களினது சம்பளத்தில் 15 சதவீதமாக இருந்த அது 17 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டது. இரண்டாம் தடவையாக ஏற்பட்ட கூலி அதிகரிப்பு 1957ம் ஆண்டு ஐப்பசி மாதத்திலும், கார்த்திகை மாதத்திலும் ஆகும். முறைவழுப் பரிசீலனைக்குழு செய்த சிபார்சுகளைத் தொடர்ந்து ஒரு சில ஊழியர்களினது சம்பளங்கள் 1957ம் ஆண்டு ஐப்பசி மாதம் உயர்த்தப்பட்டன. அவ்வருடம் கார்த்திகை மாதத்திலிருந்து, குறைந்த சம்பள வர்க்கத்தைச் சேர்ந்த ஊழியர்களினது விசேட வாழ்க்கைச் செலவுத் துணைச்சம்பளம் குறிப்பிடத்தக்க அளவால் உயர்த்தப்பட்டது. அதன் பயனுல் துணைச்சம்பளமாக ஒரு மாதத்திற்கு ரூபா 5 பெற்ற ஊழியர்கள், விவாகமானவர்களாயிருந்தாலும் சரி, விவாகமாகாதவர்களாயிருந்தாலும் சரி, அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 17.50 வழங்கப்பட்டது. அதே வேளையில் ஒரு மாதத்திற்கு ரூபா 300க்குக் குறைவான சம்பளம் பெறும் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய வாழ்க்கைச் செலவுத் துணைச்சம்பளம் ஒரு மாதத்திற்கு ரூபா 5 வீதம் அதிகரிக்கப்பட்டது.

1952ம் ஆண்டுக்கும், 1961ம் ஆண்டுக்கும் இடையில் அரசாங்க ஊழியர்களினது உண்மைக் கூலிவிகிதக் குறிகாட்டிகள், 1960ம் ஆண்டு ஆவணி மாதம் மிக உச்சமான மட்டங்களை அடைந்தன. அதாவது இக்குறிகாட்டிகள் (1952=100 என்ற அடிப்படையின்படி) இலிகிதர், தொழிற் பயிற்சி பெற்றோர் ஆகிய ஊழியர்களுக்கு 121.4 புள்ளிகளாகவும், சிறுசேவை ஊழியர்களுக்கு 129.5 புள்ளிகளாகவும், அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு 116.6 புள்ளிகளாகவும் விளங்கின.

இவ்வூழியர்களின் கூலி விகிதங்களில் 1961ம் ஆண்டு எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆயினும் வாழ்க்கைச் செலவு அதிகரித்ததன் பயனுல் அவர்களின் உண்மைக் கூலி விகிதங்கள் 1.3 சதவீதத்தாற் குறைந்தது.

தனிப்பட்டோர் துறையில் உள்ள கூலி விகிதங்களின் நடமாட்டங்கள் பற்றிக் கிடைக்கக்கூடிய விபரங்கள், கூலி நிர்ணயசபை அமைக்கப்பட்ட தொழில்களில் உள்ள தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவையாகவே மட்டும் உள்ளன. கூலி நிர்

அட்டவணை II—27

கூலி நிர்ணயசபையுள்ள தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் கீழ்மட்டக் கூலிவிகிதக் குறிகாட்டிகள்

(1952=100)

| காலம் | விவசாயத் தொழிலாளர் | | கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர் | | கூலிநிர்ணயசபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளர் | |
|---|---|---|---|---|---|---|
| | கீழ்மட்டக் கூலி | உண்மைக் கூலி | கீழ்மட்டக் கூலி | உண்மைக் கூலி | கீழ்மட்டக் கூலி | உண்மைக் கூலி |
| 1953 .. | 101·5 | 99·0 | 101·0 | 99·4 | 101·5 | 99·9 |
| 1954 .. | 103·1 | 102·0 | 100·7 | 99·6 | 102·5 | 101·4 |
| 1955 .. | 106·6 | 106·1 | 101·4 | 101·0 | 105·9 | 105·4 |
| 1956 .. | 107·1 | 106·9 | 102·9 | 102·7 | 106·4 | 106·2 |
| 1957 .. | 108·7 | 105·6 | 104·5 | 101·5 | 107·8 | 104·7 |
| 1958 .. | 110·2 | 105·2 | 116·2 | 110·9 | 110·8 | 105·6 |
| 1959 .. | 110·2 | 104·8 | 128·8 | 122·4 | 112·3 | 106·7 |
| 1960 .. | 110·2 | 106·5 | 128·1 | 123·8 | 111·8 | 108·0 |
| 1961 .. | 110·7 | 105·6 | 128·4 | 122·5 | 112·3 | 107·2 |

மூலங்கள்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
இலங்கை மகா வங்கி

ணய சபையின் கண்காணிப்பின் கீழ் உள்ள தொழிலாளர்களுள் 89.4 சதவீதமானோர் விவசாயத் தொழிலாளர்களாகும். அட்டவணை II—27, கூலி நிர்ணய சபையிலுள்ள தொழில்களில், 1953ம் ஆண்டிற்குப்பின் நிலவிய கூலி விகிதங்களினதும், உண்மைக் கூலி விகிதங்களினதும் நடமாட்டங்களைக் காட்டுகிறது.

கூலி நிர்ணயசபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் 1961ம் ஆண்டில் 0.5 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. இவ்வுயர்ச்சி, விசேட வாழ்க்கைச் செலவுத் துணைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையால் விவசாய தொழிலாளாகளுக்கான கீழ்மட்டக்கூலி விகிதம் 0.5 சதவீதத்தால் உயர்ந்தமையாலும், கைத்தொழில் வர்த்தகம் ஆகிய தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் கூலி விகிதம் 0.2 சதவீதத்தால் உயர்ந்தமையாலும், ஏற்பட்டது. ஆயினும் மேலே சொல்லப்பட்ட தொழிலாளர்களினது உண்மைக் கூலி விகிதங்கள் முறையே 0.8 சதவீதத்தாலும், 1.1 சதவீதத்தாலும் குறைந்தனவாக விளங்கின. ஏனெனில் அவ்வுயர்ந்த துணைச்சம்பளங்கள், வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுவதையும் ஈடுசெய்வதற்குப் போதியவையாக இருக்கவில்லை.

வேலை: நாட்டிற் காணப்படும் தொழில், தொழில் பற்றுமை, வேலையின்மை மட்டங்களைப்பற்றிய விரிவான விபரங்கள் கிடையாது. நாட்டில் உள்ள 21 தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவு செய்தோர்களின் எண்ணிக்கைபற்றிய தரவுகள், வேலையின்மை மட்டத்தின் போக்கில் ஏற்படும் மாற்றங்களை எடுத்துக்காட்ட உதவுகின்றன. 1960ம் ஆண்டு தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவு செய்தோரின் எண்ணிக்கையிற் காணப்பட்ட மேலேற்றப் போக்கு, 1961ம் ஆண்டின் முதலிருமாதங்களிற் தொடர்ந்தது. ஆயினும் இவ்வாண்டின் மீதிப் பகுதியில் இவர்களின் எண்ணிக்கை சிறிது வீழ்ச்சியடைந்தது. 1960ம் ஆண்டு முடிவில் 1,51,092 ஆக விளங்கிய இவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் 1,51,265 ஆக விழங்கியது. இவ்வாண்டின் ஆரம்பத்தில் சகல வகைப் பதிவாளர்களின் எண்ணிக்கைகளிலும் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. தேர்ச்சி பெற்றோரின் பதிவுகளிற் காணப்பட்ட மேலேற்றப் போக்கு 1961ம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நிகழ்ந்தது. இந்த ஆண்டின் மார்கழி மாத முடிவில், தேர்ச்சி பெற்ற இப்பதிவாளர்களின் எண்ணிக்கை 18,201 ஆக விளங்கியது. இது முந்தைய ஆண்டில் இருந்ததிலும் பார்க்க 7.5 சதவீதத்தால் உயர்ந்தது ஆகும். 1961ம் ஆண்டு மார்கழி மாதத்தில் தொழில் நுட்பப்பயிற்சி பெற்றோர், இலிகிதர் முதலிய பதிவாளரின் எண்ணிக்கை, 1960ம் ஆண்டு மார்கழி மாதத்தில் இருந்ததிலும் பார்க்க 5.3 சதவீதத்தால் கூடியதாக விளங்க, அரைத் தேர்ச்சி பெற்றோர், தேர்ச்சி பெறுதவர் முதலியோரது பதிவுகளின் எண்ணிக்கை முறையே 1.9 சதவீதத்தாலும், 2.5 சதவீதத்தாலும் தாழ்ந்ததாக விளங்கின.

கடந்த சில ஆண்டுகளில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையையும், ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள பதிவாளர்களின் மொத்த எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதமும், பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை II—28**

**வேலயில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கையில் இவர்களின் சதவீதமும்**

| வருடம் | தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோரும் இலிகிதரும் | % | தேர்ச்சி பெற்றோர் | % | அரைத் தேர்ச்சி பெற்றோர் | % | தேர்ச்சி பெறுத வர்கள் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1953 .. | 1528 | 18·2 | 669 | 10·4 | 1371 | 10·0 | 2820 | 12·2 | 6388 | 12·4 |
| 1954 .. | 1097 | 9·4 | 879 | 11·1 | 922 | 5·7 | 4660 | 17·0 | 7558 | 11·9 |
| 1955 .. | 2166 | 14·9 | 1064 | 12·5 | 1187 | 5·9 | 3791 | 13·6 | 8208 | 11·6 |
| 1956 .. | 1913 | 11·9 | 845 | 8·6 | 1565 | 6·1 | 4162 | 12·1 | 8485 | 9·9 |
| 1957 .. | 1176 | 6·3 | 709 | 5·3 | 1180 | 3·8 | 3053 | 6·4 | 6118 | 5·5 |
| 1958 .. | 1827 | 9·2 | 800 | 5·9 | 1006 | 3·1 | 2251 | 4·4 | 5884 | 5·0 |
| 1959 .. | 1667 | 8·0 | 1045 | 7·5 | 1275 | 3·8 | 3218 | 5·4 | 7205 | 5·6 |
| 1960 .. | 1400 | 5·3 | 771 | 4·6 | 1247 | 3·6 | 4744 | 6·5 | 8162 | 5·4 |
| 1961* .. | 1257 | 4·6 | 631 | 3·5 | 964 | 2·8 | 2794 | 3·9 | 5648 | 3·7 |

* தற்காலிகமானவை.

மூலம்: தொழிற் திணைக்களம்.

1961ம் ஆண்டு வேலையில் அமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை, முந்தைய ஆண்டின் எண்ணிக்கையிலும் பார்க்கத் தாழ்வாகவே விளங்கிற்று. தேர்ச்சி பெறாத பதிவாளர்களில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை குறைந்தமையாலேயே இவ்வீழ்ச்சி பெரும்பாலும் ஏற்பட்டது. 1960ம் ஆண்டு 4,744ஆக விளங்கிய இவ்வெண்ணிக்கை, 1961ம் ஆண்டில் 2,794க்கு வீழ்ச்சியடைந்தது. வேலையில் அமர்த்தப்பட்ட ஏனைய வகைப் பதிவாளர்களின் எண்ணிக்கையும், முந்தைய ஆண்டிலும் பார்க்கத் தாழ்வாகவே விளங்கியது. பதிவு செய்தோர்களின் எண்ணிக்கைகளில், வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதம், அரைத்தேர்ச்சிப் பெற்ற தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையிற்றான் ஏனைய தொகுதிகளிலும் பார்க்க மிகத் தாழ்வாக விளங்கியது. இவ்வகைப் பதிவாளர்களில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதம் 2.8 ஆக விளங்கியது. சகல வகைத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையிலும், வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதங்கள் முந்தைய ஆண்டிலும் பார்க்கத் தாழ்வாகவே விளங்கியது.

தொழில் உறவுகள்: வேலைநிறுத்தங்கள் பற்றிக் கிடைத்த விபரங்கள், தொழில் முகாமை உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்காட்ட உதவியாக இருக்கின்றன. வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை, அதன் பயனாக இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் முதலியனவற்றைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II—29

வேலை நிறுத்தங்கள்

| வருடம் | தோட்டங்கள் | | | ஏனைய தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் |
| 1958 .. | 123 | 39,372 | 340,632 | 96 | 42,713 | 399,228 |
| 1959 .. | 177 | 47,318 | 352,095 | 71 | 42,453 | 460,141 |
| 1960 .. | 123 | 42,528 | 259,948 | 37 | 4,839 | 15,139½ |
| 1961* .. | 89 | 24,864 | 315,491 | 38 | 21,758 | 115,248 |

மூலம்: தொழிற் திணைக்களம்.

* தற்காலிகமானவை

1961ம் ஆண்டு தோட்டப் பகுதியில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை முந்தைய ஆண்டிற் பார்க்க கணிசமான முறையில் தாழ்ந்ததாக விளங்க, ஏனைய பகுதிகளில் வேலைநிறுத்த நிலைமையில் அவ்வளவு சீர்திருத்தம் ஏற்படவில்லை. ஆயினும் தொழிற் சங்கங்களையுடைய தொழிலாளர்களின் தொகையிற் பெரும்பகுதியானோர் வேலைசெய்கின்ற தோட்டங்களிலேயே ஆகக்கூடிய வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. தோட்டத் தொழிலாளர்களில் ஏறக்குறைய 64.6 சதவீதமானோர் தொழிற் சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். தொழிற்சங்கங்களின் அங்கத்தினர்களாக இருக்கும் சகல தொழிலாளர்களில் இவர்களின் எண்ணிக்கை 59.7 சதவீதமாக உள்ளது. 1961ம் ஆண்டு தோட்டங்களிலும், ஏனைய தொழில்களிலும் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் முறையே 89* ஆகவும், 38* ஆகவும் விளங்கின. தோட்டப் பகுதியில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களில், ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும், முந்தைய ஆண்டிற் பார்க்கக் கணிசமான அளவில் குறைந்ததாக விளங்கிற்று. ஏனைய தொழில்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை, முந்தைய ஆண்டின் எண்ணிக்கையுடன் அநேகமாக ஒத்திருந்த பொழுதிலும், வேலைநிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை முந்தைய ஆண்டிற் பார்க்க மிகவும் கூடியதாக விளங்கிற்று. 1960ம் ஆண்டில் தோட்டப் பகுதியிலும், ஏனைய பகுதிகளிலும் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் சராசரி நிகழ்ச்சிக் காலம், முறையே 6.1 நாட்களாகவும், 3.1 நாட்களாகவும் விளங்கின.

* தற்காலிகமானவை.

இவை 1961ம் ஆண்டில் முறையே 10.9* நாட்களுக்கும், 5.3 நாட்களுக்கும் உயர்ந்தன. இதனால் இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்களின் எண்ணிக்கையில் ஒரு கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தொழிற் திணைக்களம் செய்த பாகுபாட்டிற்கேற்ப வேலைநிறுத்தங்களுக்காகக் கொடுக்கப்பட்ட காரணங்களை நோக்குமிடத்து தோட்ட விதிகள், ஒழுக்கக் கட்டுப்பாடு, வேலையாற்ற ஒழுங்குகள், முதலியனவை மொத்த வேலை நிறுத்தங்களில் 29.9* சதவீதமானவைக்கு காரணங்களாகவும், கூலி உயர்வுகள் தவிர்ந்த ஏனைய கூலிசம்பந்தமான பிணக்குகள் 12.6* சதவீதமானவைக்குக் காரணமாகவும் விளங்கின. இவை காரணமாக வேலைநிறுத்தங்கள் பிரதானமாகத் தோட்டங்களிலேயே நடைபெற்றன. வேலை நீக்கம் அல்லது வேலை இழப்பு முதலியன மொத்த வேலைநிறுத்தங்களில் 17.3* சதவீதமானவைக்கும், கூலிஉயர்வு பற்றிய கோரிக்கைகள் 4.7* சதவீதமானவைக்கும் காரணங்களாக விளங்கின. இக்காரணம் பற்றிய வேலைநிறுத்தங்கள் தோட்டங்கள் அல்லாத ஏனைய பகுதிகளிற்தான் நடைபெற்றன. இக்காரணங்களின் முக்கியத்துவம், கடந்த ஆண்டுகளிற் காணப்பட்ட போக்கையே பின்பற்றியது. பொதுவான கோரிக்கைகளின் பயனால் ஏற்பட்ட வேலைநிறுத்தங்களின் விளைவினாலேயே ஆகக்கூடிய ஆள்வேலைநாட்கள் இழக்கப்பட்டன. இழக்கப்பட்ட மொத்த ஆள்வேலைநாட்களுள் 36.6* சதவீதமானவை அவ்வாறு ஏற்பட்டனவாகும். கூலி உயர்த்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகளால் 18.6* சதவீதமான ஆள்வேலை நாட்களும், கூலி கொடுப்பதிற் சுணக்கம், முற்பணம் முதலிய ஏனைய கூலித்தகராறுகளின் விளைவால் 20.1* சதவீதமான ஆள்வேலைநாட்களும் இழக்கப்பட்டன. கூலி உயர்த்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகளின் விளைவால் ஏற்பட்ட வேலைநிறுத்தங்கள் முழுவதும், தோட்டங்கள் அல்லாத துறையிற்தான் ஏற்பட்டன. இத்துறையில் இழக்கப்பட்ட மொத்த ஆள்வேலை நாட்களுள் 69.5 சதவீதமானவை இக்காரணத்தால் ஏற்பட்டனவாகும். வேலைநிறுத்தங்கள் பற்றிய தரவுகள், வேலைநிறுத்தம் எந்த மாதத்தில் முடிவுற்றதோ அந்த மாதத்திற்கெதிராகக் காட்டப்பட்டுள்ளன. எனவே 1961ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தம், 1962ம் ஆண்டில் முடிவுற்றதாயின், அதன் விளைவாக இழக்கப்பட்ட ஆள்வேலைநாட்கள், 1961ம் ஆண்டுடன் சேர்க்கப்படமாட்டா.

---

* தற்காலிகமானவை.